**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.48/2021 - DW-2**

| | |
|---|---|
| Name | திருமதி.எம்.நசீமா |
| Husband/Father Name | திரு.மகபூப் பாஷா |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **19.01.2026.**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கில் சாட்சி சொல்ல இந்நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. பிரதிவாதிகள் அவர்கள் சார்பாக சாட்சியம் அளிக்க கேட்டுக்கொண்டதின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்தேன். 1-ம் வாதி வச்சலாவிற்கு திருமணம் நடந்த காலத்தில் நான் சிறு வயது உடையவராக இருந்திருப்பதால் எனக்கு அவரது திருமணம் பற்றி தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். 1-ம் வாதிக்கு திருமணமானது எனக்கு தெரியாது. இறந்து போன கரிம்முதீன் முத்துக்கடையில் கிரேட் பிரியாணி என்ற கடையை நடத்தி வந்தார் என்றால் அவருடன் அவரது தம்பியும் சேர்ந்து அந்தக் கடையை நடத்தி வந்தனர். அந்த பிரியாணி கடையில் வந்த வருமானத்தை வைத்து கரிம்முதீன் வழக்கு சொத்தை சுயமாக கிரையம் வாங்கினார் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 3-ல் வழக்கு சொத்து என்னுடைய சகோதரரால் அவருடைய சுய சம்பாதியத்தைக் கொண்டு காலியிடமாக கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது சரிதானே என்றால் அவர் கடன் வாங்கி அந்த சொத்தை கிரையம் வாங்கினார். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள உள்கடன் என்பது நாங்கள் பெண் கொடுத்த சம்மந்தி வீட்டில் வாங்கிய கடன் ஆகும். வெளிக்கடன் என்பது பைனான்ஸ் நிறுவனத்தில் வாங்கிய கடன் ஆகும். யார்யாரிடம், எவ்வளவு தொகை வெளிக்கடனாக வாங்கப்பட்டது என்ற விவரம் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய சகோதரர் உள்கடன் மற்றும் வெளிக்கடன் வாங்கியதாக என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 3-ல் சொல்லியிருப்பது போல் என்னுடைய சகோதரர் உள்கடன், வெளிக்கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. இறந்து போன கரிம்முதீன் என்பவருக்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் மட்டுமே வாரிசுதாரர்கள் என்றும், அவரது முதல் மனைவியான வச்சலா மற்றும் அவரது மகன் 2-ம் வாதி ஆகியோரை

சேர்க்காமல் வருவாய் துறையினர் வழங்கிய வாரிசு சான்றை ரத்து செய்ய கொடுத்த மனுவில் 1 முதல் 4 பிரதிவாதிகளை விசாரித்து வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளதால் அந்த விவரங்கள் அனைத்தும் எனக்கும் தெரியும் என்றாலும் வழக்கிற்காக 1–ம் வாதியையும், அவரது மகனையும் யார் என்று தெரியாது என மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் அண்ணன் கரிம்முதீன் இறந்த பிறகு வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு வந்த விவரம் எனக்கு தெரியும். தற்போது முத்துக்கடையிலுள்ள கிரேட் பிரியாணி கடையை என் 2–வது அண்ணன் ஜெய்னுலாபுதீன் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். கிரேட் பிரியாணி கடை நடத்தியதில் என் அண்ணனுக்கு நஷ்டம் ஏற்பட்டதாக நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னுடைய உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் கோரியபடி எல்லா பரிகாரங்களும் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:–**</u> இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.